ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

இரண்டாம்பத்து

______________

7-ஆம் திருமொழி - ஆனிரை

______*_______

* ஆனிரைமேய்க்கநீபோதி அருமருந்தாவதறியாய் *
கானகமெல்லாம்திரிந்து உன்கரியதிருமேனிவாட *
பானையில்பாலைப்பருகிப் பற்றாதாரெல்லாம்சிரிப்ப *
தேனிலினியபிரானே! செண்பகப்பூச்சூட்டவாராய். (1)

கருவுடைமேகங்கள்கண்டால் உன்னைக்கண்டாலொக்கும்கண்கள் *
உருவுடையாய்! உலகேழும் உண்டாகவந்துபிறந்தாய்! *
திருவுடையாள்மணவாளா! திருவரங்கத்தேகிடந்தாய்! *
மருவிமணம்கமழ்கின்ற மல்லிகைப்பூச்சூட்டவாராய். (2)

மச்சொடுமாளிகையேறி மாதர்கள்தம்மிடம்புக்கு *
கச்சொடுபட்டைக்கிழித்துக் காம்புதுகிலவைகீறி *
நிச்சலும்தீமைகள்செய்வாய்! நீள்திருவேங்கடத்துஎந்தாய்! *
பச்சைத்தமனகத்தோடு பாதிரிப்பூச்சூட்டவாராய். (3)

தெருவின்கண்நின்றுஇளவாய்ச்சிமார்களைத் தீமைசெய்யாதே *
பருவும்தமனகமும்சீர் மாலைமணம்கமழ்கின்ற *
புருவம்கருங்குழல்நெற்றி பொலிந்தமுகிற்கன்றுபோலே *
உருவமழகியநம்பீ! உகந்திவைசூட்டநீவாராய். (4)

புள்ளினைவாய்பிளந்திட்டாய்! பொருகரியின்கொம்பொசித்தாய்! *
கள்ளவரக்கியைமூக்கொடு காவலனைத்தலைகொண்டாய்! *
அள்ளிநீவெண்ணெய்விழுங்க அஞ்சாதுஅடியேன்அடித்தேன் *
தெள்ளியநீரிலெழுந்த செங்கழுநீர்சூட்டவாராய். (5)

எருதுகளோடுபொருதி ஏதும்உலோபாய்காண்நம்பி! *
கருதியதீமைகள்செய்து கஞ்சனைக்கால்கொடுபாய்ந்தாய்! *
தெருவின்கண்தீமைகள்செய்து சிக்கெனமல்லர்களோடு *
பொருதுவருகின்றபொன்னே! புன்னைப்பூச்சூட்டவாராய். (6)

குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்லஎம்கோவே! *
மடங்கொள்மதிமுகத்தாரை மால்செய்யவல்லஎன்மைந்தா! *
இடந்திட்டுஇரணியன்நெஞ்சை இருபிளவாகமுன்கீண்டாய்! *
குடந்தைக்கிடந்தஎம்கோவே! குருக்கத்திப்பூச்சூட்டவாராய். (7)

சேமாலிகனவனோடு தோழமைகொள்ளவும்வல்லாய்! *
சாமாறுஅவனைநீயெண்ணிச் சக்கரத்தால்தலைகொண்டாய்! *
ஆமாறறியும்பிரானே! அணியரங்கத்தேகிடந்தாய்! *
ஏமாற்றம்என்னைத்தவிர்த்தாய்! இருவாட்சிப்பூச்சூட்டவாராய். (8)

அண்டத்தமரர்கள்சூழ அத்தாணியுள்ளங்கிருந்தாய்! *
தொண்டர்கள்நெஞ்சிலுறைவாய்! தூமலராள்மணவாளா! *
உண்டிட்டுஉலகினையேழும் ஓராலிலையில்துயில்கொண்டாய்! *
கண்டுநான்உன்னையுகக்கக் கருமுகைப்பூச்சூட்டவாராய். (9)

* செண்பகமல்லிகையோடு செங்கழுநீர்இருவாட்சி *
எண்பகர்பூவும்கொணர்ந்தேன் இன்றுஇவைசூட்டவாவென்று *
மண்பகர்கொண்டானை ஆய்ச்சிமகிழ்ந்துரைசெய்தஇம்மாலை *
பண்பகர்வில்லிபுத்தூர்க்கோன் பட்டர்பிரான்சொன்னபத்தே. (10)

அடிவரவு : ஆனிரை கரு மச்சு தெரு புள் எருது குடம் சேமலிகன் அண்டத்து செண்பகம் இந்திரன்

---